21st October 1971]

APPENDIX

(*Vide* answer to started question No. 4 on page 5).

(1970-71 ஆம் ஆண்டு) முதலாண்டு ஒருங்கிணைப்பு எம்.பி.பி.எஸ். வகுப்புகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான தேர்வு 1970-71-ல் மருத்துவக் கல்லூரிகளை பலவற்றைக் கொண்ட யூனிட் வாரியான அடிப்படையில் நடைபெற்றது. திரு. எ. பெரியகருப்பனும் மற்றொருவரும் தாங்கம் இந்தப் பட்டப்படிப்புக்குத் தெரிந்தெடுக்கப்படாததை எதிர்த்தும், இந்தப் படிப்புக்கு மாணவர்களை யூனிட்' வாரியாகத் தேரிந்தெடுத்தது சரியல்லவென்றும் வாதித்தும், புதுடில்லி தலைமை நீதி மன்றத்தில் 'ரிட்' மனு தாக்கல் செய்தனர். தலைமை நீதிமன்றம், மருத்துவக் கல்லூரிக்கான இடங்கல் 'யூனிட்' வாரி அடிப் படையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதால் தேர்வுகள் செல் திறனுள்ள முறையில் செய்யப்பட்டது என்று கூறுவதற்கில்லை என்றும் மேலும் வாய்மொழித் தேர்வுகள் இதற்கான விதிகளின்படி நடத்தப்படவில்லை என்றும் தீர்ப்பு கூறியது. 'யூனிட்' வாரியாக மாணவர்களைத் தெரிந்தெடுக்கும் முறை சரியல்ல வென்று அது தள்ளி விட்டது. திரு. எ. பெரியகருப்பன் செய்துகொண்ட மற்றொரு ரிட் மனுவில், தலைமை நீதிமன்றம், பல்வேறு தலைப்புகளின் கீழ் வாய்மொழித் தேர்வுக்குச் கொடுக்கப்பெறும் மதிப்பெண்கள் அரசினராலேயே பகிர்ந்தளிக்கப்படலாம் எனவும் தீர்ப்பு வழங்கியது. இதன்படி நடப்பாண்டு முதல் 1-ம் ஆண்டு ஒருங்கிணைந்த எம்.பி.பி.எஸ். பட்டபடிப்புக்கு மாணவர்கள் தேர்வு மாநிலம் முழுவதன் அடிப்படையில் நடத்தப்பட வேண்டும் என்றும், வாய்மொழித் தேர்வுக்கு அளிக்கப்படும் 75 மதிப்பெண் வெவ்வேறு தலைப்பு களின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றும் ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS